**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT**
**CHENGALPATTU**
**SC No. 18/2024**

| | |
|---|---|
| Ranking of Witness | **PW.4** |
| Name | திரு.அந்தோணிஸ்டாலின் |
| Father's Name | திரு.தாசன் |
| Age | 50 |
| Address | காவல் ஆய்வாளர், கடம்பத்தூர் காவல் நிலையம், திருவள்ளூர் மாவட்டம். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.06.2026.

**(எதிரி காணொளி மூலம் ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

**முதல் விசாரணை –**

நான் தற்சமயம் திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு செங்கல்பட்டு நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியிலிருந்த போது, கடந்த 6.12.2019 ம் தேதி மாலை 5 மணியளவில் உதவி ஆய்வாளர் விஜயபாஸ்கர் நிலைய பொறுப்பில் இருந்த போது, செங்கல்பட்டு அரசு பொது மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அ.சா.1 ரவிசந்திரன் அளித்த புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.3** ஐ பதிவு செய்து நிலையம் வந்து குற்ற எண். 604/2019 ல் இ.த.ச பிரிவுகள் 294(b), 458, 397 ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.4**. வழக்கினை நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு காலை 7 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் கமருதீன், சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் **அ.த.சா.ஆ.5,** மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.6** தயார் செய்து சாட்சிகள் 1 முதல் 6 ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னிட்டு 9.12.2019 ம் தேதி மாலை 4 மணியளவில் செங்கல்பட்டு மலைபூங்கா தண்ணீர் தொட்டி அருகே உள்ள பழைய கட்டிடத்தில் 1ம் எதிரியை கைது செய்த போது, அவர் தானாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகள் அன்புராஜ், ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் மாலை 4.15 மணிக்கு பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி

**அ.த.சா.ஆ.7**. பின்னிட்டு எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 12.12.2019ம் தேதி மதியம் 2 மணியளவில் செங்கல்பட்டு குண்டூர் BSNL அலுவலகம் அருகில் உள்ள குண்டூர் ஏரிகரை அருகில் 2ம் எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னிட்டு சாட்சிகள் 7 முதல் 10 ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கு சம்பவத்தில் காயமடைந்த சாட்சிகள் ரவிசந்திரன், சித்ரா, ஏழுமலை ஆகியோருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் ரவி, சபர்ணா ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடுகள் மற்றும் காயச்சான்றிதழ்கள் முறையே **அ.த.சா.ஆ.8 முதல் அ.த.சா.ஆ.13** பெற்றேன். பின்னிட்டு விசாரணை முடித்து எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 458, 397-2 எண்ணிக்கையின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் சொன்ன வாக்குமூலங்களை அவரவர் சொன்ன விதத்தில் பதிவு செய்தேன்.

**குறுக்கு விசாரணை –**

சம்பவ நாளிலிருந்து எத்தனை நாட்கள் கழித்து எதிரிகள் கைது செய்யப்பட்டார்கள் என்றால் 1ம் எதிரி 3 நாட்கள் கழித்தும், 2ம் எதிரி 6 நாட்கள் கழித்தும் கைது செய்யப்பட்டார்கள். இந்த வழக்கில் எந்தவிதமான வழக்குச் சொத்துக்களும் கைப்பற்றப்படவோ, கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யவோ இல்லை என்று சொன்னால் சரிதான். செங்கல்பட்டு நகர காவல் நிலைய குற்ற எண்.613/2019 வழக்கானது எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. நான் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றும், அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏற்ப தயார் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடிக்காமல் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

17/06/26

**மறுவிசாரணை – இல்லை.**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்துப்பார்த்து சரி என்று ஒப்புக் கொண்டு 17.06.2026 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

தலைமை குற்றவியல் நடுவர்,
செங்கல்பட்டு.